**செய்தி வெளியீடு எண்: 649** **நாள்: 12.09.2018**

**செய்தி வெளியீடு**

**அரசுத் துறைகளுக்குத் தேவையான பொருள் மற்றும் சேவையை கொள்முதல் செய்திட உதவும் மத்திய அரசின் 'அரசு மின்–சந்தை இணையதளத்தை' (Government e-Marketplace) பயன்படுத்துவது குறித்த தமிழக அரசின் விழிப்புணர்வு முகாம்**

அரசுத் துறைகள் இணைய வழியாகப் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதை ஊக்குவித்திட ஏதுவாக மத்திய அரசு 'அரசு மின்–சந்தை' (**Government e-Marketplace**) என்ற இணையவழிக் கொள்முதல் தளத்தை 2016–இல் அறிமுகப்படுத்தியது.

இந்த 'அரசு மின்–சந்தை' இணையவழி கொள்முதல் தளத்தை இந்தியாவில் உள்ள மத்திய, மாநில அரசுத்துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் பயன்படுத்துவதன் மூலம் ஒளிவுமறைவற்ற மற்றும் துரிதமான கொள்முதல் சேவையைப் பெற்றிட இயலும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், தமிழக அரசும் இந்த இணையவழி கொள்முதல் தளத்தை அனைத்து அரசுத் துறைகளும் தங்களது கொள்முதல் சேவைக்குப் பயன்படுத்திடுமாறு அறிவுறுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு, 'அரசு மின்–சந்தை'–யினை பயன்படுத்துவது குறித்து அரசுத் துறைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட விழிப்புணர்வு முகாம்களை நாடு முழுவதும் செப்டம்பர் 4, 2018 முதல் அக்டோபர் 15, 2018 வரை நடத்திட மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. அத்தகைய விழிப்புணர்வு முகாம் ஒன்று, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வாயிலாக இன்று (12.09.2018) சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலகத் துறைகளின் அதிகாரிகளுக்கென நடத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு முகாமினை

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து, தலைமையுரை ஆற்றினார்கள். இம்முகாமில் கலந்து கொண்ட தலைமைச் செயலகத் துறைகளின் அதிகாரிகளுக்கு இக்கொள்முதல் தளத்தினை உபயோகப்படுத்துவது குறித்த பயிலரங்கமும் மற்றும் அவர்கள் மடிக்கணினி வழியாக இத்தளத்தில் அவர்தம் துறை சார்பாக கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக பதிவு செய்வதற்கும் பயற்சியளிக்கப்பட்டது.

இவ்விழிப்புணர்வு முகாமில் வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர் டாக்டர். சந்தோஷ் பாபு, இ.ஆ.ப. அவர்கள் 'அரசு மின்–சந்தை'–யினை பயன்படுத்துவதால் விளையும் நன்மைகளை விவரித்ததுடன், அனைத்து அரசுத் துறைகளும் இத்தளத்தை முழுமையாகப் தமது கொள்முதல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு கரூவூலம் மற்றும் கணக்குத்துறை ஆணையர் திரு.தென்காசி எஸ். ஜவஹர், இ.ஆ.ப., மின்னாளுமை ஆணையர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமைச் செயல் அலுவலர் திரு.சந்தோஷ் கே. மிஷ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இயக்குநர் திரு. எம். விஜயகுமார், இ.ஆ.ப., மற்றும் மத்திய, மாநில அரசின் அதிகாரிகள் மற்றும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**